சூழ்நிலையில் இன்று கரூர் தாலுகா அலுவலகம் முன்பே ஐந்து ஊராட்சிகளைச் சேர்ந்த பொது மக்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இத்தகைய பதற்றத்தைத் தணிக்க தமிழக அரசு மணல் எடுப்பதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கே இருக்கிற சூழ்நிலைகளுக்கேற்ப மணலை அள்ளிக்கொள்வதற்காக புதிய குவாரிகளைத் திறப்பதற்கான அனுமதியை இந்த அரசு வழங்கி இருக்கிறது. பொதுமக்கள் பல்வேறு இடங்களிலும் ஆங்காங்கே இதுபோன்ற எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்பை, மக்களைவிட அங்கே இருக்கிற சில தனிப்பட்டவர்களும் சேர்ந்து செய்கிறார்கள் என்கிற செய்தியும் (மேசையைத் தட்டும் ஒலி) அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றி தீர விசாரித்து, நிச்சயமாக இந்த அரசு உரிய முடிவை எடுக்கும்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் முன்னனுமதி எதுவும் வாங்கவில்லை. என்னிடம் எழுதியும் கொடுக்கவில்லை. உட்காருங்கள்.

## 3. கவன ஈர்ப்பு

### சீர்காழி தொகுதி, பனங்காட்டாங்குடி ராஜாத்தி அண்ணி நடுநிலைப் பள்ளியை அரசு எடுத்து நடத்தக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எம் பன்னீர்செல்வம்.

2006 ஆகஸ்ட் 8]

***திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி, அகரஎலத்தூர் பனங்காட்டாங்குடி ராஜாத்தி அண்ணி தனியார் நடுநிலைப் பள்ளியை தாளாளரால் நடத்த முடியாததாலும், கட்டட வசதி இல்லாமையாலும் ஏற்பட்டுள்ள இன்னல்கள்" குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் சரகம், பனங்காட்டாங்குடி, ராஜாத்தி அண்ணி உதவி பெறும் நடுநிலைப் பள்ளியின் நிர்வாகி, தொடர்ந்து பள்ளியை நடத்த இயலாத காரணத்தால், அதில் பணிபுரியும் ஆசிரியர்களுடன் அப்பள்ளியை அரசிடம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்ததன் அடிப்படையில், இப்பள்ளியை அரசு ஏற்று நடத்துவதற்கான கருத்துருவை தொடக்கக் கல்வி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. இப்பள்ளியின் தற்போதைய நிலை பின்வருமாறு:-

இப்பள்ளியில் 258 மாணவ, மாணவிகள் பயில்கின்றனர். 9 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். பள்ளியில் இரண்டு லைட் ரூப் கட்டடங்கள் உள்ளன. இட வசதி, தோட்ட வசதி, விளையாட்டிட வசதி உள்ளது. ஆசிரியர்களுக்கு மட்டும் கழிப்பிட வசதி உள்ளது. மாணவ, மாணவிகளுக்குத் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மறைவு தட்டிகளாலான கழிவறை பயன்படுத்தப்படுகிறது. 2 கைப்பம்புகள் குடிநீர் வசதி உள்ளது. 2006–2007 ஆம் கல்வியாண்டில் 'அனைவருக்கும் கல்வி' இயக்கத் திட்டத்தின்கீழ், 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர பள்ளியை நடத்த அருகில் சமுதாயக்கூடமோ, வேறு இடவசதியோ இல்லை. மேற்கொண்டு தற்காலிக ஏற்பாடாக, ஷிப்டு முறையில் பள்ளி நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதை உடனடியாக நடைமுறைப்படுத்த, சம்பந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். சீர்காழி தொகுதி, கொள்ளிடம் சரகம், பனங்காட்டாங்குடி, ராஜாத்தி அண்ணி உதவிபெறும் நடுநிலைப் பள்ளியின் நிர்வாகி தொடர்ந்து பள்ளியை நடத்த இயலாத காரணத்தால், அதில் பணிபுரியும் ஒன்பது ஆசிரியர்களுடன் அரசிடம் ஒப்படைக்கச் சம்மதம் தெரிவித்ததன் அடிப்படையில், இப்பள்ளியை அரசு ஏற்று நடத்துவதற்கான கருத்துருவைத் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் அரசுக்கு அனுப்பியுள்ளதாகவும், இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் விவர அறிக்கையில் உள்ளது.

தற்சமயம் இப்பள்ளியில் 210 மாணவர்களும், 190 மாணவிகளும் படித்து வருகிறார்கள். மொத்தம் 400 மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். ஆனால், விவர அறிக்கையில் 258 மாணவ, மாணவிகள் படித்து வருவதாகச் சொல்லியுள்ளார்கள். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டுகளிலே எடுக்கப்பட்ட புள்ளிவிவரமாக இருக்கலாம். தற்சமயம் தீப்பிடிக்காத கூரைக் கட்டடங்கள் இரண்டு மட்டும்தான் உள்ளன. வருகின்ற 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் 'அனைவருக்கும் கல்வி' இயக்கத் திட்டத்தின்கீழ் 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் விவர அறிக்கையில் சொல்லியுள்ளார்கள். அப்பள்ளியின் நிர்வாகியும் தன்னால் நடத்த இயலவில்லை என்றும், அரசே எடுத்துக் கொள்வதற்கு ஒப்புதலும் கொடுத்துவிட்டதால் அரசே நடத்தினால்தான் அப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களைப் போக்கமுடியும் என்பதாலும், இல்லையென்றால் பள்ளியை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதாலும், இதனை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அப்பள்ளியை அரசே எடுத்து நடத்திட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையினைக் குறித்து கல்வி மானியக் கோரிக்கையினுடைய விவாதத்தின்போதும் மாண்புமிகு உறுப்பினர்

சீர்காழி பன்னீர்செல்வம் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அதிலே பதிலுரையிலே நான் தெரிவிக்கின்றபோதுகூட, 'மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழத்தக்க வகையிலே இது பரிசீலிக்கப்படும்' என்று அன்றைக்கு அறிவித்தேன். அதைத் தொடர்ந்து துறையின் சார்பிலே அந்தப் பள்ளியினுடைய நிர்வாகிகளிடத்திலே அவர்கள் பேசி, அவர்களும் அந்தப் பள்ளியிலே இருக்கக்கூடிய இடம், கட்டடம், தளவாடச் சாமான்கள் ஆகிய அத்தனையையும் மொத்தமாக அரசுக்கு அளிப்பதற்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதன் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்றும், அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுடைய நலன் கருதியும், இந்த அரசு, அந்தப் பள்ளியை இந்த ஆண்டே ஏற்று நடத்தும் என்று நான் இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளியினுடைய மாணவர்கள் எண்ணிக்கையைக் குறித்து அவர்கள் தெரிவித்தார்கள். துறையிலேயிருந்து கொடுத்திருக்கக்கூடிய தகவலை நான் இங்கே தெரிவித்திருக்கிறேன். இருந்தாலும், பள்ளியினுடைய மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், வரக்கூடிய 2006–2007 ஆம் ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய 'அனைவருக்கும் கல்வி' இயக்கத்தின் சார்பிலே அங்கே 3 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும். மாணவர்களுடைய தேவைக்கேற்ப தொடர்ந்து கட்டடங்கள் கட்டுவதற்கும், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்வதற்கும் படிப்படியாக அரசு ஏற்பாடு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியை இந்த ஆண்டே அரசு எடுத்து நடத்துவதாக அறிவித்ததற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் சீர்காழி தொகுதி மக்கள் சார்பாகவும், அப்பகுதிவாழ் மக்களின் சார்பாகவும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.